DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC- 74/2019

Prosecution witness – PW.12

| | | |
|---|---|---|
| Name | :திரு.மாரிமுத்து | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petition u/s.317 Cr.P.C. filed through E-filing and allowed)

21.08.2024 – 05.50 PM

முதல் விசாரணை

1. நான் வீரசோழன் கிராமத்தில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் தாசில்தார்.

2. கடந்த 2011ம் ஆண்டு உழக்குடியை சேர்ந்த புரோக்கர் ஒருவர் என்னை சுகன்யா சேம்பருக்கு வேலைக்காக அழைத்துச் சென்றார். அவரை ஊரில் போலீஸ் என்று அழைப்பார்கள்.

3. என்னுடன் 12 குடும்பங்கள் வேலை செய்தார்கள். அவர்கள் அனைவரும் சாலைமறைக்குளத்தைச் சேர்ந்தவர்கள். சேம்பரில் செங்கல், கல் அறுக்க சென்றோம்.

4. வேலைக்கு செல்லும்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பணமாக ரூ.20,000/-, ரூ.30,000/- என வாங்கிக்கொண்டு சென்றோம். நான் ரூ.30,000/- பெற்று வேலைக்கு சென்றேன்.

5. அந்த செங்கல் சேம்பரின் உரிமையாளர் மூர்த்தி என்பவர் நான் பெற்ற பணத்தை திருப்பி வாங்கிக் கொண்டார். ஓய்வின்றி வேலை செய்தோம். தங்குவதற்கு அங்கு இடம் தந்தார்கள். நாங்களாக சமைத்துக் கொள்வோம். சமையல் பாத்திரங்கள் எடுத்துச் சென்றோம்.

6. எங்களுக்கு வாரத்தில் ரூ.500 முதல் 700/- வரை சம்பளமாக தருவார்கள். எங்களுக்கு கல் அறுக்கும் அளவிற்கு சம்பளம் வழங்குவார்கள். ஒரு நாளைக்கு ரூ.2,000/- வேலை செய்தால் முன் பணம் பெற்றதற்கு

ரூ.1,500/— வீதம் எடுத்துக்கொண்டு ரூ.500/— மட்டும் தருவார்கள்.

7. ஊரில் நல்லது கெட்டது நடந்தால் ஒருவர் மட்டும் செல்ல வேண்டும். எங்களுக்கு கஷ்டமாக இருந்தது. வெளியே வர முடியவில்லை. எங்களுடன் வேலை பார்த்த கார்த்தி என்பவரை முதலாளி மூர்த்தி என்பவர் அடித்துவிட்டார். அதனால் அவர் ஊருக்கு சென்று விட்டார்.

8. அவர் அதிகாரிகளிடம் சொன்னதன் பேரில் தாசில்தார் மற்றும் பி.டி.ஓ. அதிகாரிகள் வந்தார்கள். எங்களை ஒரு வாகனத்தில் ஏற்றி அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள்.

9. பின்னர் திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள். எங்களை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:—</u>**

இல்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.